# MADURAI KAMARAJ UNIVERSITY

Palkalai Nagar, Madurai, Tamil Nadu, India,

## Sri Sathguru Sangeetha Vidyalayam
## College of Music and Research Centre

(Accredited with B+ Grade by NAAC)

15A, Gokhale Road, Tallakulam, Madurai-2.

**Mrs.V.MUTHUKKANI**

Research Scholar

**(Registration No.F9455)**

**Sri Sathguru Sangeetha Vidyalayam, College of Music and Research Centre**

will defend her **Ph.D Thesis** through ONLINE (GOOGLE MEET) Viva - Voce

Examination on 10-12-2021 at 11.00 AM (IST)

## Title of the Thesis

**“கை முத்திரைகளின் பல வகைப் பயன்பாடுகள்”**

**Research Supervisor and Convener**

**Dr.V.BALA, M.Music., Ph.D.,**
***Principal – Retd.***
**Sri Sathguru Sangeetha Vidyalayam**
College of Music and Research Centre,
Madurai-625002.

**External Examiner**

**Dr.Padma Narasimhachari,**
***Professor***
Department of Performing Arts
Sri Venkateswara University,
Tirupati.

Link to join the Viva Voce Session

http://meet.google.com/qft-sfxn-hbh

Faculty members, Research Scholars and Students are cordially Invited
to take part in the online Viva Voce Session

# SRI SATHGURU SANGEETHA VIDYALAYAM

(College of Music and Research Centre)

## TECHNICAL INFORMATION

- We will join the live session through Google Meet Platform.
- For those of you who would access the meet with Google Chrome please use the line https://meet.google.com/qft-sfxn-hbh
- Those who would use mobile devices, install Google Meet from the play store and enter the following Meeting ID (qft-sfxn-hbh) when prompted.
- Session will start at (11.00AM (IST) However, it is advised to join 15 minutes earlier to avoid any technical glitches.

## GENERAL INSTRUCTIONS

- Please leave your Name and the name of the Institution in the Live chat section during the session.
- Kindly make sure that you have MUTED your microphones turned off your VIDEO during the session.
- Please do not use Screen Sharing option at any point of time of the session.
- Please avoid unnecessary interference during the presentation.
- As the candidate goes on with the presentation, you can send your queries in the chart box only.
- Participants are requested to maintain the decorum throughout the session.

# கை முத்திரைகளின் பலவகைப் பயன்பாடுகள்

மதுரை காமராஜர் பல்கலைக்கழக முனைவர் (Ph.D)

பட்டத்திற்கு அளிக்கப்பெறும் ஆய்வேட்டின் சுருக்கம்


**ஆய்வாளர்**

வெ.முத்துக்கனி

பதிவு எண் : F9455

**நெறியாளர்**

முனைவர் V.பாலா M.Music Ph.D



**மதுரை காமராசர் பல்கலைக்கழகம்**

**மதுரை**

**டிசம்பர் - 2020**

# கை முத்திரைகளின் பலவகைப் பயன்பாடுகள்

**முன்னுரை :**

மனிதன் சூரியனையும், சந்திரனையும் துணை கொண்டு இயங்கி கொண்டிருக்கிறான். சூரியனும், சந்திரனும் மறைந்துவிட்டால் மனிதன் நெருப்பின் வெளிச்சத்தில் இயங்குகிறான். நெருப்பு இல்லாமல் போனால், பேச்சின் மூலம் இருக்கும் இடத்தை வெளிப்படுத்துகிறான். வெளிச்சமாக விளங்கக் கூடிய அந்த பேச்சுக்குக் காரணியாக செய்கைகள் விளங்குகின்றன. சொல்லையும், பொருளையும் நிர்ணயிப்பது செய்கையாகும்.

சாதாரணமாக ஒரு குழந்தையிடம் சென்று, என்னை எவ்வளவு பிடிக்கும் என்று கேட்டால், அக்குழந்தை இவ்வளவு என்று காட்டும், இந்த இவ்வளவு என்பதற்கு ஒரு பொருள் ஏற்படுகிறது. உலகத்தின் ஒவ்வொரு படைப்புகளிலும், கை முத்திரைகள் முக்கியப் பங்கு வகிக்கிறது.

முத்திரை என்பதற்குப் பல அர்த்தங்கள் உள்ளன. முத்திரைஎன்பது அங்கிதம் (Seal) எனவும், அடையாளச் சின்னம் (Symbol) எனவும் பொருள்படும். வடமொழியில் **ஹஸ்தம்** என்றும், தமிழில் **கை** என்றும், ஆகம நூல்களில் **முத்திரை** என்றும் பலவாறாக அழைக்கப்படுகின்றன.

நம் முன்னோர்கள் இறைவனை நாத மூர்த்தியாகவும், வடிவுடையனாகவும் கருதி, அவன் ஆடுவதனாலேயே இந்த உலகம் இயங்குகிறது என்பதை அறிந்திருந்தனர். **'அவனருளால் அவன் தாள் வணங்கி'** எனும் வாக்கிற்கிணங்க கலைகளைத் தெய்வீகத் தன்மை பொருந்திய கலைகளாக வளர்ந்து வந்துள்ளனர்.

கடவுளால் படைக்கப்பட்ட மனிதனின் மனமும், உடலும் அற்புத கருவிகளாகும். மனம் சிந்திப்பதை உடல் செயல்படுத்துகிறது. இதனை அடிப்படையாகக் கொண்டது தான் இசை மற்றும் நாட்டியக்கலை. அதன் பல விதமான வேலைகளை செய்யும் போதும், பேசுகின்ற போதும், கை கால்களை

அசைத்தும் முகப்பாவங்களைக் காட்டியும் பலவாராகச் செயல்படுகிறோம். இவை இயற்கையாகவே நிகழ்கிறது. எனவே இயற்கையான சூழ்நிலையில் தன் செய்கைகளை செம்மையாக இருக்கும் படி செய்யும் போது அது கலையாகிறது. அதுவே நடனக்கலையாகும். நாட்டியத்தில் கை முத்திரைகள் எனப்படும் ஹஸ்தங்கள் அடங்கியுள்ளன. நாட்டியத்திலும் இசையிலும் ஹஸ்த முத்திரைகள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. ஒரு கலைஞன் தன் மனதில் தோன்றிய உணர்ச்சிகளை அல்லது எண்ணத்தை முழுவதுமாக வெளிப்படுத்தி மற்றவர்களுக்குப் புரியும் வண்ணம் விளக்குவது ஹஸ்த முத்திரை எனப்படும். முத்திரை என்பது சூழ்நிலைக்கு ஏற்றவாறும், பிடிக்கப்படும் இடத்தைப் பொறுத்தும் முகபாவங்களுக்கு ஏற்றவாறும் அதன் அர்த்தம் மாறுபடும். ஒவ்வொரு சொல்லிற்கும் ஏற்றார் போல் ஆடுவதற்கு ஹஸ்தங்கள் பயன்படுகின்றன.

இவ்வாறு நாட்டியத்தில் முக்கிய இடத்தை வகிக்கும் ஹஸ்த முத்திரைகளின், பல்வேறு பயன்பாடுகள் பற்றி ஆராய்ந்து அறியும் வண்ணம் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வின் நோக்கம் :**

இசையில் முத்திரைகள், நாட்டிய இலக்கண நூல்களில் முத்திரைகள், நடன உருப்படிகளில் முத்திரைகளின் பயன்பாடு, தெய்வ வழிபாடு மற்றும் சிற்பங்களில் முத்திரைகள் குறித்தும், பிறதுறைகளில் முத்திரைகள் முதலியவற்றின் பயன்பாடுகள் குறித்து ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**ஆய்வின் எல்லை :**

முத்திரைகளின் பயன்பாடு என்பது நம் வாழ்க்கையுடன் இணைந்தே உள்ளன. இவை நாட்டியக்கலையின் முக்கிய அம்சமாகத் திகழ்வதால் அதில் பயன்படுத்தப்படும் எண்ணற்ற முத்திரைகளை சில வடமொழி இலக்கண நூல்களை மட்டும் துணை கொண்டு ஒப்பிட்டு, நாட்டிய வடிவங்களில் அதன் உபயோகம், பிறதுறைகளில் அதன் பங்கு என இவ்வாய்வு எல்லை திகழ்கின்றது.

**ஆய்வின் கருதுகோள் :**

**'கை முத்திரைகளின் பலவகைப் பயன்பாடுகள்'** என்ற ஆய்வு, நாட்டிய சாஸ்திரம், அபிநயதர்பணம், பரதார்ணவம், சிலப்பதிகாரம், பஞ்ச மரபு, நாட்டிய சாஸ்திர சங்கரஹம், மகாபரத சூடாமணி போன்ற நூல்களில் கூறப்பட்டுள்ள முத்திரைகளை ஒப்பீடு செய்தும், இசை, நாட்டியம், தெய்வ வழிபாடு மற்றும் சிற்பங்களிலும், பிறத்துறைகளிலும், முத்திரைகளின் பங்கு பெரிதும் துணை நின்று வருகின்றன என்ற கருதுகோள் இவ்வாய்வில் உறுதி செய்யப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

**ஆய்வு அணுகுமுறை :**

**"கை முத்திரைகளின் பலவகை பயன்பாடுகள்"** என்ற இவ்வாய்வில் இலக்கண நூல்களில் காணப்படும் முத்திரைகளை விளக்கும் பொழுது விளக்கமுறை ஆய்வாகவும், ஒப்பீட்டு ஆய்வாகவும், பல்வேறு துறைகளில் பயன்படும் முத்திரைகளைத் தொகுப்பதன் மூலம் தொகுப்பாய்வாகவும், இயல் வாரியாக பகுத்து ஆய்வதன் மூலம் பகுப்பாய்வாகவும், நாட்டிய இசை உருப்படிகளில் முத்திரைகளின் செயல்களை ஆராய்ந்து செய்யும் வகையில் செயல்முறை ஆய்வாகவும், காதுகேளாதோர், வாய்பேசாதவர் அவர்களின் பள்ளியில் சென்று தரவுகள் சேகரிப்பதிலும், அக்குபஞ்சர் மருத்துவருடனும், பூசாரியுடனும் நேர்காணல் மூலம் தரவுகள் சேகரிப்பதிலும் கள ஆய்வாகவும் இவ்வாய்வு மேற் கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வு முன்னோடிகள்**

'முத்திரைகள்' நாட்டியத்தில், பூஜாகிரமத்தில், சிற்பத்தில் என்ற தலைப்பில் முதுகலை பட்டப்படிப்பிற்கான ஆய்ஏடாக திருமதி.பாலா அவர்களால் 1983-ம் வருடம் அளிக்கப்பட்டுள்ளது. ஒற்றைக் கை முத்திரைகள் ஓர் ஒப்பீடு ஆய்வில் நிறைஞா் பட்ட ஆய்வு திருமதி.வாணி காயத்ரி அவர்களால் அளிக்கப்பட்டுள்ளது.

**ஆய்வு சிக்கல் :**

**‘கை முத்திரைகளின் பலவகைப் பயன்பாடுகள்’** என்ற இவ்வாய்வில் பிறதுறைகளில் கள ஆய்வு மேற்கொள்ளும் பொழுது அத்துறைகளைச் சார்ந்த வல்லுநர்களிடமிருந்து கருத்துக்களை பெறுவதில் பல சிக்கல்கள் ஏற்பட்டன.

எனவே, காலத்தின் நிலையைக் கருதி இவ்வாய்வில் முக்கியமான பகுதிகளை மட்டும் இவ்வாய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

**ஆய்வின் பயன் :**

**‘கை முத்திரைகளின் பலவகைப் பயன்பாடுகள்’** என்ற இவ்வாய்வின் மூலம் எண்ணிலடங்காத முத்திரைகள் கையாளப்பட்டு வருவதை அறியமுடிகின்றது. இசையில் ராக, தாள, ஸ்வரங்களில் முத்திரைகள், நாட்டிய இலக்கண நூல்களில் முத்திரைகள், நாட்டியத்தில் காணப்படும் முத்திரைகளின் செய்முறையில் வேற்றுமை, ஒற்றுமை நிறைந்தும், வேறுபாடுகளுடனும் பலவிதமான விநியோகங்களும், பல அறிய முத்திரைகளும் அதன் பயன்பாடுகளும் அறியப்பட்டன. தெய்வ வழிபாடு, மற்றும் சிற்பங்களில் முத்திரைகள், அதில் ஒவ்வொரு தெய்வங்களுக்குறிய தனித்தனி முத்திரைகள், தேவ வசிய முத்திரைகள், மாந்திரீக முறையில் முத்திரைகள், விளம்பரங்களில், யோகாவில், தியானத்தில், அக்குபஞ்சர், காது கேளாதவர் மற்றும் ஊமை போன்றவர்கள் பயன்படுத்தும் முத்திரைகள், போன்ற பல்வேறு விதமான முத்திரைகள் முழுமையாக ஆய்வு செய்து, இசைக்கலைஞர்கள், நாட்டிய கலைஞர்கள், இசைக்கலைகளைக் கற்கும் மாணர்கள், தமிழக இசை ரசிகர்கள் போன்றோர் அறிந்து கொண்டு மிகவும் பயன்பெறும் வகையில் ஆய்வு பயன் விளைந்துள்ளது. இவ்வாய்வு மேலும் பலர் ஆய்வினை செய்யும் வகையில் தூண்டுதலாகவும் அமைந்துள்ளது.

**ஆய்வேட்டில் கட்டமைப்பு :**

**‘கை முத்திரைகளின் பலவகைப் பயன்பாடுகள்’** என்ற ஆய்வானது முன்னுரை, முடிவுரை மற்றும் ஐந்து இயல்களாக பகுக்கப்பட்டுள்ளன.

இயல் I - இசையில் முத்திரைகளின் பங்கு

இயல் II - நாட்டிய இலக்கண நூல்களில் முத்திரைகள்

இயல் III - நடன உருப்படிகளில் முத்திரைகளின் பயன்பாடுகள்

இயல் IV - தெய்வ வழிபாடு மற்றும் சிற்பங்களில் முத்திரைகள்

இயல் V - பிறத்துறைகளில் முத்திரைகள்.

இயல்கள் தோறும் கூறப்பட்டுள்ள முடிவுகள் இறுதியில் முடிவுரையாக கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் துணைநூற்பட்டியலும், பின்னிணைப்பும் தரப்பட்டுள்ளன.

**இயல் - I**

**“இசையில் முத்திரைகளின் பங்கு”** என்ற முதல் இயலில் கீதம், வாத்தியம், நிருத்தியம் போன்ற மூன்றும் சேர்ந்தது இசை ஆகும். இசையில் முத்திரைகளும் ஒரு அங்கமாகக் கருதப்படுகிறது. உடலில் உள்ள தழும்பானது எவ்வாறு ஒருவனுடைய அங்க அடையாளத்தைக் காட்டி இவர் தான் என்று, உறுதிப்படுத்துகின்றதோ, அதனைப் போன்று பொதுவாக இசை, நாட்டிய வாக்கேயக்காரர்கள் தாம் பாடும் இசைப்பாடலில் தனது பெயரையோ, அடையாளத்தையோ, குறிப்பையோ தமது பாடலின் கையாண்டுள்ளனர். இதற்கு முத்திரை வைத்துப் பாடுதல் என்று பெயர். இசையில் முத்திரையானது 18 வகைப்படும். அவை வாக்கேயக்கார, இராக, தாள, ஆசாரிய, போஷகர், க்சேத்திர, வம்ச, பிரபந்த, நாயக, ரச, விருது, லஷண, சந்த, பக்தி, சக்கர, கிரக, லிங்க, சம்வத்சர போன்றவை ஆகும். தாள அங்கங்கள் கைசெய்கையினால் முத்திரைகளோடு கையாளப்படுகின்றன. மேலும் நாட்டியங்களில் முத்திரைகள் பயன்படுத்துவது போன்று இசையில் ஸ்வரம், ராகம், முதலியவற்றிற்கு நாட்டிய சாஸ்திர சங்க்ரஹம், மகாபரத சூடாமணி போன்ற இவ்விரு நூல்களில் முத்திரைகள் கூறப்பட்டுள்ளன. அவைகளைப் பற்றியும் இசைக் கருவிகளை காட்டும் முத்திரைகளைப் பற்றியும், இசைக் கருவிகளை கையாளும்போது தோன்றகூடிய முத்திரைகளைப் பற்றியும், ஆய்ந்து அறிவதே இவ்வியலின் நோக்கமாகும்.

**இயல் - II**

**"நாட்டிய இலக்கண நூல்களில் முத்திரைகள்"** என்ற இரண்டாவது இயலில் நாட்டிய இலக்கண நூல்களின் மூலம் நாட்டியக்கலையின் தோற்றம், அதன் பல்வேறு பரிமாணங்களை நாம் தெளிவுற தெரிந்து கொள்ள முடிகின்றது. பல நாட்டிய இலக்கண நூல்கள் வடமொழியிலும், தமிழிலும் கையாளப்பட்டு வருகின்றன. இந்நூல்களில் முத்திரைகளுக்கென்று தனிப்பகுதிகள் கொடுக்கப்பட்டுள்ளன.

**ஹஸ்தம் :**

நாட்டிய கலைஞன் அபிநயங்களை மற்றவர்களுக்கு புரியும் வண்ணம் வெளிபடுத்த கைவிரல்களை நீட்டியும், மடக்கியும் பல வகைகளில் தனித்தும், சேர்த்தும் செய்யப்படும் ஹஸ்தங்கள் மூன்று வகைப்படும். அவை,

| | | | |
|---|---|---|---|
| ஹஸ்தங்கள் | அஸம்யுத ஹஸ்தங்கள்<br>(ஒற்றைக்கை, இணையாக் கை) | : | 28 |
| | ஸம்யுத ஹஸ்தங்கள்<br>(இரட்டைக் கைகள், இணைந்தகைகள்) | : | 24 |
| | நிருத்தக் கை<br>(கரணங்களுக்கு பயன்படக் கூடியவை) | : | 30 |

போன்ற மூன்று வகை ஹஸ்தங்களுடன், பல்வேறு பொருள்களைச் சித்தரிக்கும் ஹஸ்தங்களும் காணப்படுகின்றன. அபிநய தர்பணம் என்ற நூலில் கூறப்பட்டுள்ள முத்திரைகள் மற்றும் செய்முறை, விநியோகங்கள் ஆகியவை பொதுவாக அனைவராலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. எனவே, அபிநய தர்பணத்தில் கூறப்பட்டுள்ள ஹஸ்தங்கள், செய்முறை, விநியோகங்களை எடுத்துக் கொண்டு மற்ற நூல்களில் கூறப்பட்டுள்ள ஹஸ்தங்கள், செய்முறை மற்றும் விநியோகங்களுடன் ஒப்பிட்டு ஆராய்வதே இவ்வியலின் நோக்கமாகும்.

**இயல் - III**

**"நடன உருப்படிகளில் முத்திரைகளின் பயன்பாடு"** என்ற மூன்றாவது இயலில், இந்திய மக்கள் மிகப் பழமையான வேத காலத்தின் தொடக்கத்தி லிருந்தே இசை வழிபாட்டுடன் இறை வழிபாட்டை கூட்டாக நடத்தி வந்துள்ளனர். இசை தோன்றிய காலத்திலிருந்தே நாட்டியமும் தோன்றியிருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது. இசை இல்லாத இறைவழிபாட்டை உயிரற்ற உடலாகக் கருதி நம் முன்னோர்கள் பாடல், கருவி இசை, ஆடல் முதலியவற்றை முறைப்படுத்தி எழுதி வைத்துள்ளனர். மேலும் நாட்டியத்திற்கு இசையே அடிப்படையாகும். இசை மட்டுமல்லாமல், இசைக் குழுவினர்களுடன் பக்கவாத்தியங்களும் ஒரு அங்கமாக விளங்குகின்றன. நாட்டியத்திற்கென்றே அமைக்கப் பெற்ற இசை உருப்படிகள் மற்றும் அபிநயம், நிருத்தம், தாளம் முதலியவற்றில் உள்ள கலை நுணுக்கங்களின் சேர்க்கையினால் ஒரு தனித்தன்மை வாய்ந்த நடன உருப்படிகளாக உருவெடுக்கின்றன.

**நாட்டிய உருப்படிகள்**

நிருத்தம் | நிருத்தியம் | நாட்டியம்

இவை மூன்றும் இணைந்தே நடன உருப்படிகளாக அரங்கில் நடனமாடுகின்றன. நடன உருப்படிகளை வகுத்துக் கொடுத்தப் பெருமை தஞ்சை நால்வரையே சேரும். பாரம்பரிய முறையில் உள்ள உருப்படிகள், தற்பொழுது நடைமுறையில் காணப்படும் இதர உருப்படிகள் என பாகுபாடு செய்யலாம். தோடய மங்களத்தில் இறைவனை வணங்கி, நடன நிகழ்ச்சி ஆரம்பமாகி, களைகட்டி, அலாரிப்பில் மலர்ந்து, ஜதிஸ்வரத்தில் விறுவிறுப்பாகி, சப்தத்தில் அபிநயம் அறிமுகப்படுத்தி, வர்ணத்தில் எல்லா அம்சங்களிலும் விரிவடைந்து, பின்பு பதத்தில் பக்குவமாகவும், ஜாவளியில் ரஸாணுபவம் கொடுத்து,

தில்லானாவில் அழகு நிறைந்து நிகழ்ச்சிகளை முடிப்பது, இசை நடன உருப்படிகளாகும். அலாரிப்பு முதல் தில்லானா வரையிலான இவ்வமைப்பு மார்க்கம் என்று அழைக்கப்படுகின்றன. இவை தவிர மல்லாரி, புஷ்பாஞ்சலி, கவுத்துவம், கீர்த்தனை, பாரதியார் பாடல்கள், காவடி சிந்து, தேவாரம், திருப்புகழ் என ஆடப்படும் நடன உருப்படிகளில் முத்திரைகள் எவ்விதம் பிரயோகிக்கப்படுகின்றன என்பதனை ஆராய்வதே இவ்வியலின் நோக்கமாகும்.

**இயல் - IV**

**"தெய்வ வழிபாடு மற்றும் சிற்பங்களில் முத்திரைகள்"** என்ற நான்காம் இயலில், வழிபாடுகள் என்பது தேவ, தேவதைகளை மகிழ்விப்பதற்காகவும், ப்ரீதி அடைவதற்காகவும், பாவத்தைப் போக்குவதற்காகவும் செய்யப்படும் பூஜை ஆகும். பூஜைகளின் போது பல விதமான கை முத்திரைகள் உபயோகப்படுத்த படுகின்றன. பூஜையில் கையாளப்படும் முத்திரைகள் கடினமானவையாகும். இவை சபையோர்கள் முன் காண்பிக்கப்படுவதில்லை. பூஜைகளில் காணப்படும் முத்திரைகள், நாட்டியத்தில் காணப்படும் முத்திரைகளுடன் ஒரு சில வற்றுடன் ஒத்துபோகின்றன. தேவ வசிய முத்திரைகள், மாந்திரீக முறையில் முத்திரைகள் என பல தலைப்புகளின் மேல் முத்திரைகளை பற்றி ஆராய்வதும்,

தெய்வீகமான இடத்தைக் கொண்ட நம் சிற்பக்கலையே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே வளர்ச்சி அடைந்து வந்துள்ளன எனலாம். பல்லாயிரக்கணக்கான திருக்கோயில்களும் அதில் காணும் சிற்பங்களும் இன்றும் நாம் காணும் அளவிற்கு முக்கியத்துவம் பெற்று வளர்ந்து வருகின்றன. திருவுருவங்களை சிற்பக்கலையாக காணும் பொழுது உடல் அமைதி, கை அமைதி பற்றிய கருத்துக்களை உணர்த்தும் வகையில் உள்ளன.

தெய்வங்களின் உருவத்தை உருவாக்கும் பொழுதே முத்திரைகள் கையாளப்படுகின்றன. அம்முத்திரைகள் நாட்டியத்தில் சித்தரிக்கும் போது ரசிகர்களால் உடனே புரிந்து கொள்ள முடிகிறது. எனவே சிற்பங்களில் காணப்படும் முத்திரைகளைப் பற்றியும் ஆராய்வது இவ்வியலின் நோக்கமாகும்.

**இயல் - V**

**பிறத் துறைகளில் முத்திரைகளின் பங்கு - என்ற ஐந்தாவது இயலில்**

முத்திரை என்பதற்கு சிறப்பானது என்று பொருள். மனிதனின் வாழ்க்கையுடன் ஒன்றியிருக்கின்றன. மிகப் பழமையான காலத்திலிருந்தே பின்பற்றப் பட்டு வருகின்றன. இது ஒரு தனிமொழியாக வளர்ந்து உலகம் முழுவதிலும் கையாளப்பட்டு வருகின்றன. இசை, நாட்டியம், தெய்வழிபாடு மற்றும் சிற்பம் போன்றவைகளில் முத்திரைகளின் அதன் பங்கு என்ன என்பதை மேற்கூறிய இயல்களில் தெளிவாக குறிப்பிட்டுள்ளன. அவற்றினைத் தவிர ஊமை மற்றும் காது கேளாதவர்களுக்கான பயிற்சி, யோகா, ப்ரணாயாமம், தியானம், மருத்துவத் துறை, அக்குபஞ்சர், விளம்பரம் போன்ற பல துறைகளுடன் சம்பந்தப்பட்டு, மனித வாழ்க்கையுடனும், கலையுடனும் முக்கிய இடத்தை வகித்து வரும் முத்திரைகள் எண்ணிலடங்காதவை ஆகும். அதன் பயன்கள் அனைத்தும் மதிப்பிட முடியாதவை என்று சொன்னால் அது மிகையாகாது. பிற துறைகளில் எவ்விதம் செயல்படுத்தப்படுகின்றன என்பதைப் பற்றி அறிந்து கொள்வதே இவ்வியலின் நோக்கமாகும்.

**முடிவுரை :**

ஒவ்வொரு இயலிலும் இயல் முடிவாகக் கொடுக்கப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் முடிவுகள் தொகுத்து முடிவுரையாக அளிக்கப்பட்டுள்ளன.

**சான்றாதாரங்கள் :**

நாட்டிய இலக்கண நூல்கள், முதன்மை ஆதாரமாகவும், பூஜை, சிற்பம், யோகா போன்ற பிற நூல்கள் துணைமை ஆதாரமாகவும் சான்றாதாராம் கொடுக்கப்பட்டுள்ளன.

**துணை நூற்பட்டியல் :**

இவ்வாய்வின் உருவாக்கத்திற்கு துணை புரிந்த நாட்டிய இலக்கண நூல்கள் முதன்மை ஆதார நூல்கள் மற்றும் பல நூல்களின் பதிப்பித்த இடம், ஆசிரியர் பெயர் ஆகியவை இடம் பெற்றுள்ளன.

**பின்னிணைப்புகள்**

- நேர்காணல்
- ராக முத்திரை பட்டியல்
- நடன உருப்படிகளில் முத்திரைகளின் பயன்பாட்டிற்கான செயல்முறை குருந்தகடு (CD) இணைக்கப்பட்டுள்ளன.
- பிற நடனங்களின் முத்திரைகள் புகைப்படங்களாக கொடுக்கப்பட்டுள்ளன.